# 7 சாக்கிய நாயனார்

சித்தத்தைச் சிவன் பால் கொண்ட சைவ நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய வழியில் நமது சைவ நெறி வளர்ச்சி கண்டுள்ளது. அறுபத்து மூன்று நாயன்மார்களினது திவ்விய வரலாறுகளைச் சேக்கிழாரது பெரிய புராணத்தின் மூலம் நாம் அறிகிறோம். பெரியபுராணம் குறிப்பிடும் நாயன்மார்களுள் சாக்கிய நாயனாரும் ஒருவர்.

தென்னிந்தியாவில் காஞ்சிபுரத்தை அடுத்துள்ள **திருச்சங்கமங்கை** என்ற நகரத்தில் பிறந்த ஒருவர், உயிர்களிடத்தே பேரன்பு மிக்கவராக விளங்கினார். அவர் உயிர்களுக்கு ஏற்படுகின்ற பிறப்பு, இறப்புத் துன்பங்களைக் கண்டு மிகவும் கவலை அடைந்தார். அதற்கான காரணங்களைக் கண்டறிய ஆர்வம் கொண்டார்.

காஞ்சிபுரத்திலுள்ள பௌத்த மடத்திற்குச் சென்றார். அங்குள்ள பல பௌத்தத் துறவிகளோடு சேர்ந்து பல பௌத்த நூல்களைக் கற்றார். அந் நூல்கள் மூலம் தெளிவு பெறாத அவர் மேலும் பல சமய நூல்களைக் கற்றார். ஈற்றில் இறையருள் மூலமாகப் பிறவிப் பெருங்கடலைக் கடக்க **சிவநெறியே சாலச்சிறந்தது** என்ற நல்லறிவு வாய்க்கப்பெற்றுச் சைவ சமய நூல்களைக் கற்றார். அந் நூல்கள் மூலம், அறிவிக்க அறியும் தன்மை கொண்டவை ஆன்மாக்கள், அவ்வான்மாக்கள் மூலம் ஆற்றப்படுகின்ற புண்ணிய பாவச் செயல்கள், அக்கர்மங்களினால் விளையும் சுகதுக்க பலன்கள், அச் செயல்களை நல்குகின்ற வல்லவனாகிய பதி என்ற நான்குமே மெய்ப்பொருட்கள் என்பதை அறிந்து கொண்டார். அதனால் எந்நிலையில் நின்றாலும் எந்த வேடத்தை எடுத்தாலும் பரமசிவனது திருவடிகளை மறவாதவராக விளங்கினார்.

அவர் சாக்கியர்களது கோலத்தில் இருந்தமையால் தம்மைப் பிறர் அறியாத வண்ணம் சிவநாமத்தை நாள்தோறும் உள்ளத்திலேயே எண்ணி ஒழுகினார். திருமாலும், பிரம்மாவும் காணப்பெறாத பெரும்சோதிப்பிழம்பு ஒடுங்கி நின்ற அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தைப் பிறர் அறியா வண்ணம் பூசித்து வழிபட்டார். அவர் சாக்கிய (பௌத்த) வேடத்துடன் இருந்து சிவனருள் பெற்றமையால் **சாக்கிய நாயனார்** என அழைக்கப்பட்டார்.

சாக்கிய நாயனார் காஞ்சிபுரத்திற்கு அண்மையிலுள்ள பரந்தவெட்ட வெளியினூடாகச் சென்று கொண்டு இருக்கும் போது அங்கே சிவலிங்கம் ஒன்று எவ்வித பூசை வழிபாடுகளுமின்றிக் காணப்பட்டதைக் கண்டு மனம் வருந்தினார். சாக்கியநாயனார் சிவலிங்கப் பெருமானைத் தூய நீரால் நீராட்டி நறுமலர்கள் தூவி வழிபட்டு மகிழத் திருவுள்ளம் கொண்டார். ஆனால் அந்தப்



பரந்த வெளியில் சாக்கிய நாயனாருக்கு நீரும், மலரும் கிடைக்கப்பெறவில்லை. இறைவனிடத்தில் அவர் கொண்ட பக்தி மட்டும் தான் மிகுந்திருந்தது. அதனால் அருகிலிருந்த கல்லையெறிந்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதியபடியே சிவலிங்கப் பெருமானை வழிபட்டார். இறைவன் அரிய மலர்களாக அக்கற்களை ஏற்றுக்கொண்டார். குழந்தையானது தம் பெற்றோருக்குச் சிறு குறும்பாகச் செய்யும் விளையாட்டாக எண்ணிச் சாக்கிய நாயனாரின் இப்பூசையை சிவன் ஏற்று அங்கீகரித்தார்.

மறுநாளும் சிவலிங்க வழிபாட்டுக்காக அவ்விடத்தை அடைந்த சாக்கிய நாயனார் சிவலிங்கத்தைக் கண்டு உவகையடைந்து ''சாக்கியர் வேடத்தில் இருக்கும் நான், மலரால் சிவனை வழிபடுதலைப் பிறர் கண்டால் ஏசுவர். அதே வேளை கல்லால் எறிவதை யாரும் பார்ப்பார்களாயின் வெறுப்பின் மிகுதியால் தான் இவற்றை செய்கிறார் என்று எண்ணுவர்'' இதுவும் இறைவனின் திருவருட் செயலே என எண்ணிப் பெருமிதம் கொண்டார். அதனால் நாள்தோறும் சிவலிங்க வழிபாட்டினை மேற்கொண்ட பின்னரே திருவமுது உண்பதை வழக்கமாக்கிக் கொண்டார்.

ஒருநாள் சாக்கிய நாயனார் இறைவன் மீதுகொண்ட பக்தியின் நிமித்தம் சிவலிங்க வழிபாட்டினைச் சற்று மறந்த நிலையில் அவர் திருவமுது உண்ண அமர்ந்து விட்டார். திடீரென இறைவனது நினைவு வாய்க்கப்பெற்ற அவர் '' எம்பெருமானே! இது என்ன சோதனை! எவ்வளவு தவறான செயலைப்புரிந்து விட்டேன்! அண்ணலே, ஏழையின் பிழை பொறுத்தருள்வீர்! என்று புலம்பி வெட்டவெளியிலிருக்கும் சிவலிங்கப் பெருமானைத் தரிசிப்பதற்காக ஓடோடிச் சென்றார். சிறு கல் ஒன்றினை எடுத்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி இறைவன் மீது எறிந்தார். அப்போது சாக்கிய நாயனாரின் அன்புக்குக் கட்டுப்பட்ட சிவன் விண்ணிலே உமாதேவியார் சமேதராக இடபவாகனத்தில் காட்சியளித்து அருள் பாலித்து அவரைத் தமது திருவடியில் சேர்த்தார்.

சாக்கிய நாயனார் மார்கழிப் பூராடத்தில் இறையடி சேர்ந்தமையால் அவரது குரு பூசைத்தினம் மார்கழி மாதத்தில் வரும் **பூராட** நட்சத்திரத்தில் அனுட்டிக்கப்படுகிறது. சாக்கிய நாயனாரது பக்தி மேம்பாட்டினைக் கண்டு வியந்த சுந்தரமூர்த்தி நாயனார் தனது **திருத்தொண்டத் தொகையில்**

**வார் கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே**
**மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்............**

என்றவாறு போற்றுகிறார்.

**அறுசமயத் தலைவராய் நின்றவருக் கன்பராய்**
**மறுசமயச் சாக்கியர்தம் வடிவினால் வருந்தொண்டர்**
**உறுதிவரச் சிவலிங்கம் கண்டு உவந்து கல்லெறிந்து**
**மறுவில் சரண் பெற்ற திறம் அறிந்தபடி வழுத்துவாம்**

என்ற பெரிய புராணப் பாடல் மூலம் சாக்கிய நாயனாரின் சிறப்பினைச் சேக்கிழாரும் சிறப்பித்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

## மேல் வரும் வினாக்களுக்கு விடை தருக

1. சாக்கிய நாயனார் எங்கு பிறந்தார்?
2. சாக்கிய நாயனார் எதனைக் கண்டு மிகவும் வருந்தினார்?
3. சைவ சமயம் உணர்த்தும் உண்மைப் பொருட்கள் நான்கும் எவை?
4. சாக்கிய நாயனார் தமது சாக்கிய(பௌத்த) சமய கோலத்தினை நீக்காமல் இறைவனை வழிபட்டதற்குக் காரணம் யாது?
5. சாக்கிய நாயனாரது பக்திவெளிப்பாட்டினைப் போற்றும் இரு நூல்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் தருக.

## செயற்பாடு

01. நீங்கள் கற்ற நாயனார் ஒருவருடன் சாக்கிய நாயனாரை ஒப்பிட்டு அவர்கள் இருவருக்கிடையிலும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைப் பட்டியல் படுத்துக.
02. சாக்கிய நாயனாரது குருபூசைத்தினத்தைக் கொண்டாடும் முகமாக உங்களால் மேற்கொள்ளக்கூடிய முன்ஆயத்தங்களை ஒழுங்குபடுத்துக.

## பாடச்சுருக்கம்

- பெரியபுராணம் குறிப்பிடும் நாயன்மார்களுள் ஒருவராகிய சாக்கிய நாயனார் திருச்சங்கமங்கையில் அவதரித்தார்.
- மெய்ப்பொருள் ஆய்வில் ஈடுபட்ட இவர் பல சமயச் செயற்பாடுகளை அறிந்து அவற்றின் வாயிலாகச் சைவசமயமே உண்மைச்சமயமென ஏற்றுக் கொண்டார்.
- தான் சார்ந்த சமயமும், பூண்ட கோலமும் சிவவழிபாட்டுக்குத் தடையல்ல என்பதனை நிலைநாட்டினார்.
- இலிங்க வழிபாட்டின் பின்னரே உணவுண்பது என்பதனை வாழ்வின் இறுதிவரை கடைப்பிடித்தார்.
- அன்புடன் இறைவனுக்குச் செய்யும் எச் செயலையும் இறைவன் அங்கீகரித்து அவர்களை முத்திப்பேறடையச் செய்வான் என்பதனைச் சாக்கிய நாயனாரின் வரலாற்றின் மூலம் உணரலாம்.